பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 13 | திங்கட்கிழமை | 28.08.2023 | அதிர்வு 27

## தெல்லிப்பளை துர்க்கை தேர்த்திருவிழா இன்று



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவத்தில் தேர்த் திருவிழா 03▶

# ‘இனவாத சூறாவளி’ சுழன்றடித்தாலும் தமிழரை ஒருபோதும் அழிக்க முடியாது

## கனடாவில் மனோ எம்.பி. சூளுரை



கொழும்பு, ஓகஸ்ட் 28

“இனவாத சூறாவளி சுழன்றடித்தாலும், சுற்றி சுற்றி அடித்தாலும், சுனாமியாக அடித்தாலும் சரி தமிழர்களை ஒழிக்கவோ, அழிக்கவோ முடியாது.”

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார். 03▶

# இனக்கலவரத்தை ஏற்படுத்த இனவாதிகள் தீவிர முயற்சி!

## சித்தார்த்தன் எம்.பி. விசனம்

- எஸ்.நிதர்ஷன்-

இனவாதத்தைக் கட்டவிழ்த்து, இனக்கலவரத்தை மீண்டும் ஏற்படுத்த இனவாதிகள் முயற்சிக்கின்றனர் என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரும், நாடாளுமன்ற உறுப்பினரும், புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் கந்தரோடையிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 03▶



## வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் என்றால் சிங்களவர்களின் தலைநகரில் ஏன் தங்கியுள்ளீர்?

### மீண்டும் இனவாதம் கக்கி கேள்வி எழுப்புகிறார் கம்மன்பில்ல



“வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் என்று கூறித் திரியும் தமிழ் அரசியல்வாதிகள் கொழும்பில் ஏன் தங்கியுள்ளார்கள்? கொழும்பு சிங்களவர்களின் தலைநகர் என்று அவர்களுக்குத் தெரியாதா?”

- இவ்வாறு புதிய கேள்விகளைத் தொடுத்து மீண்டும் இனவாதத்தைக் கக்கியுள்ளார் பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் 03▶

## இரகசியம்



கொழும்பில் ஓர் இராஜதந்திரியைச் சந்தித்தேன்.

இப்போது அதிகம் பேசப்படும் ஒரு விடயம் குறித்து என்னிடம் கேள்வி எழுப்பினார்.

“13ஆவது திருத்தம் மூலமான அதிகாரப் பகிர்வை ஒரு தீர்வாக ஏற்க நீங்கள் (தமிழர்கள்) ஏன் 02▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# மாத்தளையில் 7 கோடி ரூபா பெறுமதியான மாணிக்கக்கல்லைத் திருடிய தொழிலாளி!

## குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணை

மாத்தளை – லக்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவலதெனிய, எல்பிட்டியவில் அமைந்துள்ள மாணிக்கக்கல் அகழும் தளத்தில் இருந்து ஏழு கோடி ரூபாய் பெறுமதியான மாணிக்கக்கல்லைத் திருடினார் எனக் கூறப்படும் நபரைக் கைது செய்ய மாத்தளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுள்ள 62 வயதுடைய வர்த்தகர் இது தொடர்பில் மாத்தளை குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாடு செய்த தொழில் அதிபரின் மாணிக்கக்கல் அகழ்வு தளத்தில் கூலித் தொழிலாளியாகப் பணிபுரியும் நபரே மாணிக்கக்கல் அகழ்வின் போது கிடைத்த ஏழு கோடி பெறுமதியான மாணிக்கக்கல்லைத் திருடிச் சென்றுள்ளார்.

சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் மாத்தளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

# எம்.பிக்களுக்கு வழங்கப்பட்ட 698 கைத்துப்பாக்கிகள் மாயம்



1980 ஆம் ஆண்டு முதல் இப்போது வரை நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக அவர்களுக்கு அரசால் வழங்கப்பட்ட கைத்துப்பாக்கிகளில் 698 துப்பாக்கிகள் மீள கையளிக்கப்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தகவலை அறிக்கையாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த தென்னக்கோன் நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளார். மாத்தறை மாவட்ட எம்.பி. டலஸ் அழகப்பெருமவின் கேள்விக்குப் பதிலாகவே இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் 157 அரசியல்வாதிகள் இவ்வாறு கைத்துப்பாக்கிகளை மீள ஒப்படைக்கவில்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மறுக்கின்றீர்கள்?" – என்று அவர் கேட்டார்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"என் பதிலுக்கு முன்னர் ஒன்று கூறுங்கள். உண்மையில் விடயம் விளங்காமல் என்னிடம் இப்படிக் கேட்கின்றீர்களா? அல்லது புரிந்து கொண்டு, ஒரு நளினத்திற்கு இவ்வாறு கேட்கின்றீர்களா?" – என்று நான் பொய்க் கோபத்துடன் வினவினேன்.

அவர் சிரித்தார். "உண்மையாகத்தான் கேட்கிறேன்" – என்றார்.

சுருக்கமான பதிலில் – நெற்றிப் பொட்டில் அடித்தால் போல – நான் விளக்கம் கூறினேன்.

"சுருக்கமாகச் சொல்வதானால் இரண்டே இரண்டு விடயங்கள். ஒன்று – 13 என்பது ஒரு கையால் கொடுத்து மறு கையால் பறிக்கும் குள்ளநரித் திட்டம். அதிகாரத்தை மாகாணங்களுக்குப் பகிர்வதாகக் கூறிக்கொண்டு, அவ்வளவு அதிகாரங்களையும் ஆளுநர் மூலம் ஜனாதிபதி மேலதிகாரம் செய்யும் விதத்தில் இது கட்டமைக்கப்பட்டு இருக்கின்றது. இன்று தமிழகத்தில் இருப்பது போல முதல்வராக ஸ்டாலினும் ஆளுநராக ரவியும் இங்கிருந்தால் என்ன நிலைமை? இது போதும் இந்த விடயத்தை நீங்கள் விளங்கிக் கொள்ள" – என்றேன்.

"அடுத்தது –,கொடுக்கும் அதிகாரப் பகிர்வு 'மாகாண சபை'யாக அல்ல, வெறும் 'கிராமசபை'யாக இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் கொடுத்தால் மீளப் பிடுங்கி எடுக்கப்படாதமையை உறுதி செய்வதாக இருந்தால்தான் அது தீர்வு. இல்லையேல் அது இடைக்கால – தற்காலிக – ஏற்பாடுதான். காஷ்மீருக்குக் கொடுத்ததையே மீளப் பிடுங்கி எடுத்ததை நாம் பார்த்திருக்கிறோம். அத்தகைய தொத்துப்பொறி ஏற்பாடுதான் இந்தப் பதின்மூன்றும். 13 ஐக் கொண்டு வரக் காரணமான இந்தியாவின் கண் முன்னேயே அது கரைந்து, காலாவதியாகிக் கொண்டிருப்பதை இந்தியா பார்த்திருப்பதை தவிர வேறு மார்க்கம் அதற்கு இருக்கவே இல்லை. நிரந்தரமாக உறுதிப்படுத்தப்படாத ஒன்றை – உறுதிப்படுத்தவே முடியாத ஒன்றை – தீர்வு என்று கூறி எங்கள் தலையில் கட்ட முயலும் இராஜதந்திரத்தை முட்டாள்தனமானது என்றுதானே கூற வேண்டும்? இன்று ரணில் நிலைத்தால் 13ஐ முழுமையாக நடைமுறையாக்கம் செய்யலாம். நாளை கோட்டாபய போல ஒருவர் வந்தால் முழுவதையும் பிடுங்கி, தமிழரை மீண்டும் நடுவீதியில் விடலாம். அந்தளவில்தான் 13 இன் சட்ட வலிமை உள்ளது என்பது சந்தேகத்துக்கு அப்பாற்பட்டது. அத்தகைய ஒன்றை தீர்வு என்று ஏற்கலாமா? அன்று ராஜீவ் காந்தி, புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு நேரில் கொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறந்தன. அது காற்றில் – வெறும் வாய்ப் பேச்சில் – கொடுக்கப்பட்டது. ஆகவே காற்றில் பறந்தது. தப்பில்லை. ஆனால் இது 13ஆம் திருத்தம். எழுத்தில் – அரசமைப்புச் சட்டத்தில் – கொடுக்கப்பட்டது. சட்டத்திலேயே அப்படி விலக்கப்படக் கூடியது – காலாவதியாகக் கூடியது – என்பது வெளிப்படையானது. அனுபவத்திலும் அதைக் காண்கிறோம். அதைத் தீர்வு என்று சில முட்டாள்கள் பிரசாரப்படுத்துவதற்காக, நீங்களும் சேர்ந்து அதை எங்கள் தலையில் பலவந்தமாகத் திணிப்பதா? '13 ஆம் திருத்தம் மூலம் அரசமைப்புச் சட்டமாகக் கொடுத்ததை நடைமுறைப்படுத்த மாட்டோம், சட்டத்தில் இருப்பதை ஒவ்வொன்றாக – பகிரங்கமாக – பலவந்தமாக – பிடுங்குவோம், நினைத்த காலத்துக்குத் தேர்தலை கூட நடத்தாமல் அந்த அதிகாரப் பகிர்வை ஆண்டியின் பிச்சைப் பாத்திரத்துக்கு சமமாக்குவோம்' – என்றெல்லாம் கொழும்பு தெளிவாகச் செயலில் வெளிப்படுத்தி காட்டிய பின்னரும், அந்த 13 மட்டும் தீர்வாக – இறுதி ஏற்பாடாக – கருதிச் செயற்பட எங்களை வற்புறுத்துவது நீதியா? சில விமர்சகர்கள் தங்கள் நலனுக்காக உங்களுடன் சேர்ந்து பிரசாரம் செய்கின்றார்கள் என்பதற்காக ஒட்டு மொத்த தமிழர்களையும், தமிழ் தலைவர்களையும் நீங்கள் முட்டாள்களாக நினைக்கக் கூடாது. தேவையானால் இடைக்கால ஏற்பாடாக அதை கொண்டு வரலாம். அவ்வளவுதான். அதைக் கூட சிங்களம் நின்று நீடிக்க விடாது."– என்ற சாரப்பட நான் எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் சற்றுச் சூடாகக் கொடுத்தேன்.

அவர் நிலைமையைப் புரிந்து கொண்டு 'கூல்...கூல்...!' – என்று என்னைத் தட்டிச் சமாளித்தார்.

அது எனது கருத்து நிலைப்பாடு. என் சிந்தனை. என் மனதுக்குச் சரியாகப்படுவது. என் பட்டறிவில் எனக்குச் சரி என்று தோன்றுவது. அவ்வளவுதான்.

# ஆனையிறவு களப்பு பகுதியில் மீனினங்கள் செத்து மடிகின்றன



கடும் வறட்சி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஆனையிறவு களப்பு பகுதியில் ஆயிரக்கணக்கான மீன்கள் இறந்துள்ளன.

மீன் இனங்கள் அழிந்து வரும் நிலை அப்பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அண்மைக்காலமாக நாட்டில் அதிக வெப்பத்தினால் வறட்சி ஏற்பட்டு, அதனால் பல இழப்புகள் இடம்பெறுகிறன. அத்தோடு பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வறட்சியினால் ஆனையிறவு களப்பு பகுதியில் மீனினங்கள் அடியோடு அழிந்து விடுமோ என்று இப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

## இனவாத சூறாவளி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கனடா – டொரென்டோவில் நடைபெற்ற தமிழர் தெருத் திருவிழாவில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:–

“இலங்கையில் வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும், மலையகத்திலும், நாடு முழுக்கவும் யுத்தம் இல்லை. ஆனால், இனவாதம் இருக்கின்றது.

இனவாதத்தை அழித்து, வீழ்த்தி நியாயமான தீர்வைப் பெறுவோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

தமிழக தாயகம், இலங்கை தாயகம் ஆகியவற்றுக்கு வெளியே இங்கே கனடாவில் வாழ்கின்ற தமிழர்கள்தான் அதிக துடிப்புடன் இருக்கின்றீர்கள். இந்நோக்குக்காக நீங்கள் அதிக பங்களிக்க வேண்டும்.” – என்றார்.

## தெல்லிப்பளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்றைய தினம் திங்கட்கிழமை நடைபெறுகின்றது.

காலை 7 மணியளவில் நடைபெறும் வசந்த மண்டப ப்பூஜையை அடுத்து, துர்க்கை அம்மன் உள் வீதியுலா வந்து 9 மணியளவில் தேரில் ஆரோகரித்து பக்தர்களுக்கு அருட்காட்சி தருவார்.

தேர்த்திருவிழாவில் பெரும் திரளான பக்தர்கள் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப் படுகின்றது.

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில.

அவர் மேலும் கூறுகையில் –

“இலங்கை சிங்கள – பௌத்த நாடு. இந்த நாட்டில் எந்த இடத்தையும் தமிழர்களுக்குச் சொந்தம் என்று தமிழ் அரசியல்வாதிகள் உரிமை கோர முடியாது.

வடக்கு – கிழக்கு தமிழர்களின் தாயகம் அல்ல. அங்கு மூவின மக்களும் வாழ்கின்றார்கள். இந்நிலையில், வடக்கு – கிழக்கில் மூவின மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்கத் தமிழ் அரசியல்வதிகள் முயல்கின்றார்கள். இதனால் தெற்கிலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

வடக்கு – கிழக்கில் விகாரைகளை நிறுவுதல் பௌத்த மயமாக்கல் எனில் தெற்கில் – கொழும்பில் இந்துக் கோயில்கள் கட்டப்பட்டமை இந்து மயமாக்கலா? வடக்கு – கிழக்கில் சிங்களவர்கள் குடியேறுதல் சிங்கள மயமாக்கல் எனில் தெற்கில் – கொழும்பில் தமிழர்கள் குடியமர்ந்துள்ளமை தமிழர் மயமாக்கலா? தமிழ் அரசியல்வாதிகள் முதலில் வரலாற்றைப் படிக்க வேண்டும்.” – என்றார்.

## இனக்கலவரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இந்த நாடு சுதந்திரம் பெற்றதில் இருந்து இன ரீதியிலான பாகுபாடு காட்டப்பட்டே வருகின்றது. அதிலும் தொடர்ந்து ஆட்சிபீடத்திற்கு வர நினைக்கின்ற தரப்புகளும் அதற்காக இனவாதத்தையே பிரதானமாகக் கையிலெடுக்கின்றன.

மேலும் ஆட்சிக்கு வந்த பின்னரும் இனவாதப் பிரசாரங்களை முன்னெடுப்பதுடன், தீவிர இனவாதிகளாகத் தங்களைஅடையாளப்படுத்திக் கொண்டு மீளவும் ஆட்சியைக் கைப்பற்றுகின்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள்.

இந்த நாட்டைப் பொறுத்தவரையில் இனவாதப் பிரச்சினைக்கு பௌத்த பிக்குகள்தான் பிரதான காரணமாக இருக்கின்றனர். சிங்கள, பௌத்த தேசியவாதப் போக்கிலான அவர்களது செயற்பாடுகளே இனவாதத்தைக் கட்டவிழ்த்து விடுகின்றன.

குறிப்பாக கடந்த சில தினங்களிற்கு முன்னர் சக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டின் முன்பாக ஒருசிலரால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டமானது முதலில் ஒரு சில பௌத்த பிக்குகள் தலைமையில் நடைபெற்றிருந்தாலும் இதற்கான அழைப்பை அல்லது அறிவிப்பை உதய கம்பன்பில என்ற நாடாளுமன்ற உறுப்பினரே வெளியிட்டிருந்தார்.

பௌத்த பிக்குகளை வைத்து இனவாதப் போராட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது. இனவாத ரீதியிலான பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டு இனவாதத்தை கட்டவிழ்த்துவிட முயற்சிகள் நடக்கின்றன.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடைய இல்லத்திற்கு முன்பாக – அதுவும் தமிழ்க் கட்சி ஒன்றின் தலைவருடைய வீட்டிற்கு முன்பாக – முதன் முதலாக நடத்தப்பட்ட இனவாதப் போராட்டமாக இது இருக்கிறது.

இவ்வாறான இனவாதிகள் இனவாததைத் தூண்டுவது மாத்திரமல்லாமல் இனக் கலவரங்களை ஏற்படுத்தவும் முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

கடந்த காலங்களிலும் இதே போன்றே இனவாதிகளால் இனவாதம் தூண்டப்பட்டு தமிழ் மக்களுக்கு எதிராக இனக் கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. அத்தகைய நடவடிக்கைகளையே தற்போதும் இனவாதிகள் முன்னெடுக்கின்றனர்.

இவ்வாறாக இனவாத்தை கட்டவிழ்த்து விட்டு, இனக்கலவரங்களை ஏற்படுத்தி, சிங்கள – பௌத்த தேசியவாத சிந்தனையுடைய ஆட்சியை கொண்டு வர முயற்சி மேற்கொள்ளபடுகிறது.

ஆட்சி அதிகாரத்தை தக்க வைப்பதற்கும், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் முன்னெடுக்கப்படும் இனவாதப் பிரச்சாரம் இந்த நாட்டிற்கு நல்லதல்ல. அதிலும் யுத்தம் முடிவடைந்து விட்டதால் தாம் எதையும் செய்யலாம் என்ற சிந்தனையில் சிங்கள – பௌத்த இனவாதிகள் செயற்படுவது

நாட்டை அழிவை நோக்கியே கொண்டு செல்லும்.

இந்த நாடு முன்னேற வேண்டுமானால் தமிழ் மக்களுக்கான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். அதனைச் செய்வதற்கு சிங்கள – பௌத்த மேலாதிக்க சிந்தனை இல்லாமல் நியாயமாக நடக்கக கூடிய ஒருவர் நாட்டிற்குத் தலைவராக வர வேண்டும். ஆனாலும் அவ்வாறான ஒருவரை நாம் இன்னும் காணவில்லை.

நாட்டில் இனவாதம் கட்டவிழ்த்து விடப்படுவது போன்று மதவாதமும் திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விடப்படுகிறது. இனக்கரவரத்தோடு மதக்கலவரத்தையும் ஏற்படுத்துகின்ற இனவாத செயற்பாடுகளால் இந்த நாடு இன்னும் இன்னும் பின் நோக்கியே செல்லும்.

உண்மையில் மக்களிடையே இனவாதம் அல்லது இனக்கலவரத்தை ஏற்படுத்த முனைகிற இனவாதிகளுக்கு நாட்டுப் பற்றோ இனப்பற்றோ இல்லை. அவர்கள் தமது இருப்புக்களைத் தக்க வைக்கவும் தமது வருமானங்களை பெருக்கவுமே இனவாதத் தீயை கட்டவிழ்த்து விடுகின்றனர். – என்று அவர் மேலும் தெரிவித்தார்.




# நல்லூரான் 7ஆம் நாள் உற்சவம் வீதியுலா

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவின் ஏழாம் நாள் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. வள்ளி, தெய்வானை சமதேராக இடப வாகனத்திலும் முருகப் பெருமான் காராம்பசு வாகனத்திலும் வீதியுலா வந்தார்.

படங்கள் - பிரபாகன் டிலக்சன்

















# சீன ஆதிக்கத்துக்கு இடமளித்து நாடு விபரீத நிலையை நோக்கி நகருகிறது

## எச்சரிக்கின்றார் சித்தார்த்தன் எம்.பி.




இந்தியாவின் பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்காத விடயங்களை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்க தவறுவார்களாக இருந்தால் அதனுடைய விளைவுகள் மிக மோசமாக போய்விடும் என புளொட் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் எச்சரித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற தமது கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் சாவகச்சேரியில் ஊடகங்களுக்குக்கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இன்று கட்சியினுடைய மத்திய குழு கூட்டம் கூறப்பட்டிருந்தது. இன்று இருக்கின்ற அரசியல் நிலைமைகள், தமிழ் மக்கள் தொடர்ந்து முகம் கொடுத்து வருகின்ற பிரச்சினைகள், முக்கியமாக இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் – இவை தொடர்பாகக் கலந்துரையாடி ஆராய்ந்தோம்.

அத்தோடு எங்களுடைய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய நிலைப்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்களை ஆராய்ந்தோம்.

அரசியல் ரீதியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பை வளர்ப்பது மாத்திரமல்லாது தமிழ் மக்களுடைய அன்றாட பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்துடன் பேசுகின்ற விடயங்கள் தொடர்பிலும் ஆராய்ந்தோம்.

அண்மையில் அமெரிக்கா தூதுவர் இங்கு எங்களைச் சந்தித்திருக்கிறார்.

எங்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் எவ்வளவு தூரம் அமெரிக்கா எங்களுக்கு உதவ முடியும் என்பது தொடர்பில் அவரிடம் கேட்டு அறிந்து கொண்டோம். அவர்களுக்கு இருக்கின்ற எல்லைக்குள் சில விடயங்களைச் செய்யலாம் என்று கூறி இருக்கின்றார்கள். இந்த விடயங்கள் தொடர்பாகவும் எங்களுடைய மத்திய குழு அங்கத்தவர்களுடன் கலந்துரையாடி இருக்கிறோம்.

அதேபோன்று குருதூர் மலை தொடர்பிலும் கலந்துடையாடப்பட்டது. - என்றார்.

சீனாவினுடைய ஆயுதக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வரப்போவதாக கூறப்படும் செய்திகள் தொடர்பாகவும் சித்தார்த்தனிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் கூறிய பதில் வருமாறு:-

ஓர் ஆபத்தான நிலைக்கு இலங்கை போய்க் கொண்டிருக்கின்றது போல் தெரிகிறது. ஏனென்றால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு, அதே போன்று இலங்கை சீனாவுடன் வைத்திருக்கின்ற உறவு ஆகியன நிலைமைகளை மோசமாக்கி கொண்டு வருகின்றன என்று நினைக்கின்றேன்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் மிக கவனமாக கையாள வேண்டும். சீனாவினுடைய ஆதிக்கம் இங்கு கூடிக் கொண்டு வருமாக இருந்தால் – முக்கியமாக இராணுவ ரீதியான ஆதிக்கங்கள் கூடிக் கொண்டு வருமாக இருந்தால் – அது இலங்கையில் இருக்கின்ற மக்களை பெரிய அளவில் பாதிக்கும்.

எங்களைப் பொறுத்தமட்டில் நாங்கள் இந்தியாவின் தென் கரையிலே வசிக்கின்றோம். இங்கு சீனா தனது பிரசன்னத்தைக் கூட்ட முயற்சி எடுக்கிறது. அதாவது எங்களுடைய வடபுலத்திலே. இதன் மூலம் அவர்கள் இந்தியாவினுடைய பாதுகாப்புக்கு அச்சத்தைக் கொடுத்து விடுவார்கள் என்கின்ற எண்ணப்பாடு இந்தியாவுக்கு வருமாக இருந்தால், அது எங்களைத்தான் கூடுதலாகப் பாதிக்கும். ஆகவே நாங்கள் இதில் மிகக் கவனமாக எங்களால் இயன்ற அளவுக்கு செயற்பட வேண்டும். இந்த ஆய்வுக் கப்பல் வருவது என்பது இந்தியாவைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பாதுகாப்புக்கு அச்சம் தரக்கூடிய விடயமாக அவர்கள் அதைப் பார்க்கின்றார்கள். ஆகவே அதனை தவிர்ப்பதற்கான முழுமையான முயற்சியை இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்க தவறுவார்களாக இருந்தால் அதனுடைய விளைவுகள் மிக மோசமாக போய்விடும்.

ஆகவே இந்த இரண்டு நாடுகளையும், எப்படியும் அவர்களுடைய ஆதிக்கங்களை இங்கு இல்லாமல் பண்ணுவதன் மூலம், முக்கியமாக சீனா தன்னுடைய ஆதிக்கத்தை, தவிர்க்கச் செய்ய வேண்டும். ஏனென்றால் இயற்கையாகவே இந்தியாவினுடைய ஆதிக்கம் இங்கு இருந்து கொண்டிருக்கும். இது ஆயிரக்கணக்கான வருடங்களாக இருக்கின்ற உறவு. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இருக்கின்ற தூரம் ஆக 25 கடல் மைல் தொலைவுதான்.

ஆகவே இது மிகக் கவனமாகக் கையாள வேண்டிய விடயம். அவ்வாறு கையாளுவதன் மூலம்தான் இலங்கை பெரிய ஒரு பிரச்சினைக்குள் சிக்கிக் கொள்ளாமல் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன்- எனத் தெரிவித்தார்.

**தேவை**

கல்வி சம்பந்தமான You tube chanel இற்கு ஆங்கிலப் பேச்சுத் திறமையுள்ள presenter தேவை. ஆங்கிலத்தில் சரளமாக உரையாற்றவும் எழுதவும் கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

0752604360

**Required**

Need someone who can host Quiz in English Medium on Stage for AL students.

Please contact:-
0752604360

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆக்கிரமிப்பு இராணுவம்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் அம்மையார் நியாயமான - ஆனால் யதார்த்தத்தில் சாத்தியமேபடாத - ஒரு விடயத்தைக் கூறி இருக்கின்றார்.

இலங்கையின் மூத்த இராணுவ அதிகாரி ஒருவரைச் சந்தித்த அவர் "நாட்டில் நிலையான சமாதான தீர்வு ஒன்று எட்டுவதற்கு இலங்கை இராணுவம் சிறுபான்மையினர் மத்தியில் (தனது) நம்பிக்கையைக் கட்டி வளர்க்க வேண்டும்" - என்று அவர் வலியுறுத்தி இருக்கின்றார்.

அவர் கூறுவது உண்மையானது. நியாயமானது. ஆனால் சாத்தியப் பாடற்றது என்பதுதான் யதார்த்தப் புற நிலைமையாகும்.

சிறுபான்மையினர் - குறிப்பாக வடக்கு, கிழக்குத் தமிழர்கள் - இலங்கை அரசின் இராணுவத்தை தங்களது தேசத்தின் இராணுவமாகவோ - ஏன், இலங்கையின் இராணுவமாகவோ கூட - நோக்கவில்லை. அவர்களின் கருத்தியலில் அது ஆக்கிரமிப்புப் படை. அட்டூழிய படை. அடாவடி இராணுவம். அவ்வளவுதான்.

இலங்கை இராணுவம் என்பது இரண்டாவது நிலைதான். முதலில் அதை சிங்களப் படை - சிங்கள ஆக்கிரமிப்புப் படை - என்றுதான் அவர்கள் நோக்குகின்றார்கள். இந்த விடயத்தில் கருத்தியல் மாற்றம் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

முதலில் அந்த இராணுவம் தமது - தங்கள் தேசத்தினது - இராணுவம் என்ற எண்ணம் தமிழர்களுக்கு வர வேண்டுமானால் அதில் - அந்தப் படைகளில் - தமிழ் மக்களுக்கு நியாயமான பங்கிருக்க வேண்டும். தமிழ் படையணி ஒன்றே அதன் கீழ் ஒரு பிரிவாக இயங்க முடியும். ஆனால் ஆரம்பத்தில் இருந்து இன்று வரை அது தனிச் சிங்களப் படையாகவே - அதுவும் தமிழர் தேசத்தை ஆக்கிரமிக்கும் சிங்கள ஆக்கிரமிப்புப் படையாகவே - அட்டூழியம் புரிந்து வந்திருக்கிறது.

யுத்த காலத்தில் அந்த ஆக்கிரமிப்புப் படைகள் தமிழருக்கு - தமிழர் தேசத்திற்கு - எதிராகப் புரிந்த அரக்கத்தனமான கொடூரங்கள், தலைமுறைகள் தாண்டியும் தமிழினத்தின் மனதில் ஆழமாகப் பதிந்து, பாதித்து நிற்பவை. அவை இலகுவில் மறக்க கூடியவையல்ல.

இப்போதும் கூட, எங்கெங்கெல்லாம் தமிழர் தாயகம் பௌத்த, சிங்கள மயப்படுத்தப்பட்டு, கபளீகரம் செய்யப்படுகின்றதோ, அங்கங்கெல்லாம் அந்தக் கொடூரங்களை நிலை நிறுத்தும் ஏவல் படையாக மும்முரமாக ஈடுபட்டிருக்கும் சிங்கள இராணுவத்தை தமிழ் மக்கள் நம்புவதோ, அதை அரவணைத்து இயங்குவதோ சாத்தியமேயற்றவை. அது, நடக்க கூடியது அல்ல.

கடந்த 75 ஆண்டுகளாக சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள், தமிழர் தேசத்தை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தி ஆட்சி புரிவதற்கான ஆக்கிரமிப்புக் கருவியாக விளங்கியது - இன்றும் விளங்கி வருவது - இந்த இராணுவம்தான்.

பேரினவாத மேலாதிக்கத்தின் கொடூர முகமாக - கட்டமைப்பு அணியாக - விளங்கும் இலங்கை இராணுவத்தை 'சிங்கள ஆக்கிரமிப்புப் படை' என்ற அரக்கத்தனமான வடிவத்திலிருந்து குறைவாக கற்பனை பண்ணிக் கூட தமிழ் மக்கள் பார்க்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

அத்தகைய சிங்களப் படை தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறுவது என்பது சாத்தியமேயற்றது.

# 50 வகையான மருந்துகளை இறக்குமதி செய்ய திட்டம்

நாட்டில் தட்டுப்பாடு நிலவும் மேலும் 50 வகையான மருந்துகள் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் இறக்குமதி செய்யப்படவுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நாட்டில் தற்போது நிலவும் மருந்து தட்டுப்பாடு குறைவடையும் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தற்போது மருத்துவ விநியோகத் துறையில் 230 மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

அந்த மருந்துகள் அனைத்தும் உடனடியாக இறக்குமதி செய்யப்படும் என குறிப்பிட்டுள்ளது.

இந்திய கடன் உதவியின் கீழ் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கவுள்ளன என சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

# நுண்ணுயிர்க் கொல்லி மருந்து மற்றொன்றுக்கும் தடை விதிப்பு

கோ அமொக்ஸிக்லவ் (Co-amoxiclav) எனப்படும் நுண்ணுயிர் கொல்லி மருந்தின் பயன்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர் ஒருவர், இந்த நுண்ணுயிர் கொல்லி மருந்து செலுத்தியதை தொடர்ந்து உயிரிழந்துள்ளார். இதனை அடுத்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வெட்டுக் காயத்திற்கு சிகிச்சை பெறுவதற்காக வறக்காபொலயிலிருந்து வந்த 50 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த 21 ஆயிரம் தடுப்பூசிகளை கொண்ட மருந்து தொகுதியிலிருந்து 18 ஆயிரம் தடுப்பூசிகள் இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ளன என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவற்றில் ஒரு தடுப்பூசி தொடர்பில் மாத்திரமே இந்நிலை பதிவாகியுள்ளது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு மூலமாகவும் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது.

# எட்டு லட்சம் பயனாளிகளுக்கு நாளை நலன்புரி கொடுப்பனவு

விவரம் சரிபார்க்கப்பட்ட 8 இலட்சம் பயனாளிகளுக்குரிய, ஜூலை மாதத்துக்கான அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு நாளைய தினம் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கும் பணியை நலன்புரி நன்மைகள் சபை முன்னெடுத்துள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தமது சமூக ஊடக பக்கத்தில் இதனை தெரிவித்துள்ளார்.

தகவல்களை விரைவாக சரிபார்த்த பின்னர், மீதமுள்ள பயனாளிகளுக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பிலான கணக்கெடுப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், அவை நிறைவடைந்தவுடன் அனைத்து பயனாளிகளுக்கும் பணம் வைப்பிலிடப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மலையக இளைஞர் ஆற்றில் மூழ்கிப் பலி



லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திற்கு நீரேந்தும் கவுலினா ஆற்றில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3:30 மணியளவில் 20 வயதுடைய பிரபாகரன் கஜேந்திரன் என்ற இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நண்பர்களுடன் நீராடச் சென்ற நிலை யில் ஆற்றில் மூழ்கி இவர் உயிரிழுந்தார் எனப் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக் கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

பொதுமக்களின் உதவியுடன் ஆற்றில் இருந்து சடலம் இரண்டு மணி நேரத்துக்கு பின்னரே மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# திஸ்ஸ அத்தநாயக்க நேற்று முல்லைத்தீவில் கலந்தாய்வு






ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்று முல்லைத்தீவுக்கு விஜயம் செய்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விஜயத்தின் போது புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் செபஸ்தியார் தேவாலயத்தில் சென்று அங்கு மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டதன் பின்னர் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வழிபாட்டில் அவர் ஈடுபட்டார்.

முல்லைத்தீவு ஹிஜ்ராபுரம் முகைதீன் ஜ/ம்மா பள்ளிவாசலில் சென்று மக்கள் சந்திப்பில் ஈடுபட்டமையோடு அதனை தொடர்ந்து ஒட்டுசுட்டான் தான்தோன் றீஸ்வரன் ஆலயத்தில் மக்களைச் சந்தித்தார். இறுதியாக முல்லைத்தீவு ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பொன்றையும் அவர் மேற்கொண்டிருந்தார்.

இவ்விஜயத்தின் போது முல்லைத்தீவு மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான அமைப்பாளர் லக்சயன் முத்துக்குமாரசாமி, உதவி அமைப்பாளர் எஸ். சத்தியசுதர்சன், வவுனியா மாவட்ட இணை அமைப்பாளர் ரசிக்கா பிரியதர்சனி போன்றோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# பண்டாரவளை விடுதியில் பெண்ணை கொலை செய்தவர் கொழும்பில் கைது

பண்டாரவளையில் உள்ள விடுதியொன்றில் வைத்து பெண்ணொருவரை கொலை செய்துவிட்டு தலைமறைவானவர் என்று கூறப்படும் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே பண்டாரவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எட்டாம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய 3 பிள்ளைகளின் தாய் ஒருவரை பண்டாரவளை விடுதி ஒன்றுக்கு வரவழைத்து, கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துவிட்டு தலைமறைவாகியிருந்த சந்தேக நபர், விஷம் அருந்தி கொழும்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதற்கமைய பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் பண்டாரவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய பண்டாரவளை பொலிஸ் குழுவினர் கொழும்பு போதனா வைத்தியசாலைக்கு சென்று, சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

அதனையடுத்து, நேற்று அதிகாலை 3.30 மணியளவில் பண்டாரவளை பொலிஸ் நிலையத்துக்கு சந்தேக நபர் கொண்டுசெல்லப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

50 வயதுடைய களனி, கொனவல பிரதேசத்தைச் சேர்ந்த நபரே கைதாகியுள்ளார்.

அவரை விசாரணைகளின் பின்னர், பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தாங்கள் மேற்கொண்டு வருகின்றனர் என பண்டாரவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

# காட்டு மரங்களில் இருந்து கரி தயாரிக்கும் சீனத் திட்டத்துக்கு தனமல்விலவில் எதிர்ப்பு







இலங்கையில் காட்டு மரங்களில் இருந்து கரி தயாரிக்கும் சீனாவின் திட்டத்தை எதிர்த்து தனமல்வில பொதுமக்கள் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

மொனராகல – தனமல்வில, அரம் பேகேம ஆகிய இடங்களில், இந்தக் கரித் தொழிற்சாலையை திறப்பது சில சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிமுறைகளை மீறுவதாகத் தெரிவித்துக் கிராம மக்கள் எதிர்ப்புக் காட்டியமையை அடுத்து, இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் சீனாவின் இந்த திட்டம் முழுமையாக இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

20 களிமண் உலைகளைக் கொண்ட – முதலீட்டு சபையின் இந்தத் திட்டம் – தனியார் நிறுவனத்திற்கு சொந்தமானது என பல குற்றச்சாட்டுக்கள் பொதுமக்களால் முன்வைக்கப்படுகின்றன.

சீனத் திட்டத்தின் தள மேலாளரின் கூற்றுப்படி, 60 சதவீதம் இலங்கைக்கும் 40 சதவீதம் சீனாவிற்கும் வழங்கப்பட்ட கூட்டாண்மை முயற்சியாக இது உள்ளது.

இங்கு ஒவ்வொரு உலையும் எரிக்கப்படும் 4.5தொன் மரத்திற்கு 1 தொன் கரியை உற்பத்தி செய்யும் எனவும், எவ்வாறாயினும், வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் எந்தவொரு அனுமதியையும் இதற்கு வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு கழிவு மரங்கள் மட்டுமே பயன்படுத்தப்படும் என்று தள மேலாளர் கூறிய போதிலும், கடந்த வாரம், செயலிழந்த உலைகளுக்குள் தேக்கு உட்பட்ட பெறுமதியான மரக் கட்டைகள் இருந்தமை கண்டறியப்பட்டதாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த திட்டத்திற்கு உட்பட்ட அரம் பேகெம பகுதியில் பல மாதங்களாக நீர்த் தட்டுப்பாடு நிலவுவதாகவும், கிணறுகள் பெருமளவில் வறண்டு வருகின்றன எனவும், மக்கள் தண்ணீருக்காக கிணறுகளை அண்டைய வீட்டாருடன் பகிர்ந்து கொள்கின்றனர் எனவும், பயிர்களின் சேதம் கடுமையாக உள்ளது எனவும், இதன் காரணமாக யானைகள் போன்ற வன விலங்குகள், உணவு தேடி கிராமத்துக்குள்ளும் வீடுகளுக்குள்ளும் ஊடுருவத் தொடங்கியுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தத் தொழிற்சாலைக்கு எதிராகத் தொடர்ந்து போராட்டங்களும் இடம்பெற்று வருகின்றன எனக் கூறப்படுகிறது.

Singhams Media
அலை ஓசை
துல்லியமான ஒலிநயத்துடன் உங்கள் நிறுவனங்களின் பெயர்களை ஒலிபரப்பு செய்து கொள்ள நாடுங்கள்.
திருநெல்வேலி பகுதியில்.
ஆடியபாதம் வீதி, திருநல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 076 610 5467, 077 124 2732





# Pearl Island Inn

## Hotel & Restaurant

Dine - in | Take Away | Soft Drinks

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்
உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),
உலகத் தரம் வாய்ந்த
யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்
உணவு வகைகள்
மற்றும்
குளிர்பானங்களை இங்கிருந்தும்
உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று
சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**
S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**
077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com



## வவுனியா இரட்டைக் கொலைச் சம்பவம்;

# பிரதான சந்தேக நபரின் சகோதரன் மீது தாக்குதல்

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரின் சகோதரர் மீது சிலர் தாக்குதல் மேற்கொண்டதில் அவர் காயமடைந்து வவுனியா வைத்திசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 23ஆம் திகதி வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரின் சகோதரர் மீதே நேற்று முன்தினம் இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் வசித்து வரும் தவசிகுளம் பகுதியில் வைத்து இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இத் தாக்குதல் சம்பவத்தில் பிரதான சந்தேக நபரின் சகோதரரான 37 வயதுடைய நபர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொலிஸார் வசம் சிக்கியதும் ஐஸை விழுங்கிய இளைஞர் ஆஸ்பத்திரியில்

## மட்டு. பாலமீன்மடுவில் நேற்று சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்க்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள பாலமீன்மடு பிரதேசத்தில் ஐஸ் போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வியாபாரிகள் இருவரை நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பொலிஸார் சுற்றிவளைத்து மடக்கிப் பிடித்துக் கைது செய்யத போது அவர்களில் ஒருவர் தாம் வைத்திருந்த ஐஸ் போதை பொருளை வாயில் போட்டு விழுங்கினார் எனக் கூறப்படுகின்றது. அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து நேற்றுப் பிற்பகல் பொலிஸார் பாலமீன்மடு பிரதேசத்தில் வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இதன் போது வியாபாரத்துக்காக ஐஸ் போதைப் பொருளை எடுத்து வந்த 31 வயது மற்றும் 19 வயதுடைய இருவரை பொலிஸார் மடக்கிப் பிடித்துக் கைது செய்தமையுடன் 10 மில்லி கிராம், 15 மில்லிக்கிராம் போதை பொருளையும் மீட்டனர்.

இதில் 19 வயதுடையவர் பொலிஸாரைக் கண்டு ஐஸ்போதைப் பொருளை வாயில் போட்டு விழுங்கியமையையடுத்து அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட மற்றவரை விசாரணையின் பின்னர் இன்று திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்த தாம் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மாமனாரின் சூட்டுக்கு மருமகன் பலி! ரொட்டவெவவில் சனியன்று சம்பவம்



மின்னேரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொட்டவெவ,கல்லோயா பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனிப்பட்ட குடும்பத் தகராறு காரணமாக மாமனாரினால் மருமகன் மீது இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது. காயமடைந்த நபர் மின்னேரிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்திருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரொட்டவெவ, கல்ஓயா பிரதேசத்தில் வசிக்கும் 27 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் துப்பாக்கியுடன் 73 வயதுடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் ஹிங்குரக்கொட நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்படவிருந்தார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மின்னேரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை தெஹிவளை, ஓர்பன் பிளேஸ் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான நபர் கல்கிசை, படோவிட்ட பகுதியை சேர்ந்த 33 வயதுடையவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த 19ஆம் திகதி ஓர்பன் பிளேஸ் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நபர் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் தெஹிவளை, சுமுது மாவத்தை பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதன்போது அவரது பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர் கல்கிசை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவிருந்தார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெஹிவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மதுரையில் ரயில் பெட்டி தீ விபத்து: சமையல்காரர் உட்பட 5 பேர் கைது!






மதுரையில் ரயில் பெட்டி தீவிபத்துக்கு காரணமானவர்கள் என சந்தேகிக்கப்படும் சமையல்காரர் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் பொலிஸார் மற்றும் ரயில்வே பிரிவு அதிகாரிகள் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மதுரை ரயில் நிலையம் அருகே நேற்று முன்தினம் நிறுத்தி இருந்த சுற்றுலா ரயில் பேட்டியில் தீவிபத்து ஏற்பட்டது.

இந்த பெட்டியில் பயணித்த உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த 9 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். 50 இற்கும் மேற்பட்டோர் உயிர் தப்பினர். இது தொடர்பாக ரயில்வே பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். ரயில்வே அதிகாரிகள் குழு மற்றும் பொலிஸ் தரப்பினர் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

விதிமுறையை மீறி சட்டவிரோதமாக சிலிண்டர்களைக் கொண்டு வந்து, அதன் மூலம் தேநீர் தயாரித்ததால் தீப்பொறிகள் வெளியேறியதால் இந்த தீ விபத்து ஏற்பட்டது என, முதல் கட்ட விசாரணையில் தெரியவந்தது என ரயில்வே பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

ஆனாலும், தீ விபத்துக்கு காரணம் யார்? அதிகாலையில் சிலிண்டரை பயன்படுத்திய நபர்கள் யார் போன்ற பல்வேறு கோணத்திலும் ரயில்வே பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, சம்பவத்தின்போது, சிலிண்டரை பயன்படுத்திய சமையல்காரர் உட்பட 5 பேர் தப்பிச்சென்றிருந்த நிலையில், அவர்கள் நேற்று கைது செய்யப்பட்டிருந்தனர்.

# காவிரியில் நீர் திறப்பை நிறுத்தி கர்நாடகா அநீதி இழைத்துவிட்டது!

## - அன்புமணி கண்டனம்

தமிழகத்துக்கு வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி வீதம் 15 நாட்களுக்கு தண்ணீர் திறக்க காவிரி ஆணையம் ஆணையிட்டது. ஆனால், அந்த நீரை கூட முழுமையாக திறக்காத கர்நாடகம், 15 நாட்கள் நிறைவடைவதற்கு முன்பாகவே காவிரியில் நீர் திறப்பை நிறுத்தி விட்டது எனவும் இது பெரும் அநீதியாகும் என்றும் பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்துக்கு காவிரியில் திறக்கப்படும் தண்ணீரை கர்நாடக அரசு முற்றிலுமாக நிறுத்தி விட்டதால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு தற்பொழுது காலை 3 ஆயிரம் கன அடி என்ற அளவில் குறைந்து விட்டது.

மேட்டூர் அணையில் உள்ள தண்ணீரைக் கொண்டு குறுவை பாச னத்துக்காக ஒரு வாரத்துக்கு கூட தண்ணீர் திறக்க இயலாது என்பதால், குறுவை நெற்பயிர்கள் கருகும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

டெல்லியில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டத்தில், தமிழகத்தின் காவிரி பாசன மாவட்டங்களில் கருகும் நிலையில் உள்ள பயிர்களைக் காக்க வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி வீதம் 15 நாட்களுக்கு தண்ணீர் திறக்க ஆணையிடப்பட்டது.

அதன்படி 12 ஆம் திகதி முதல் காவிரியில் தண்ணீர் திறந்து விட்ட கர்நாடகம், 15 நாட்கள் நிறைவடைவதற்கு முன்பாகவே காவிரியில் திறக்கப்படும் தண்ணீரின் அளவை படிப்படியாக குறைத்து விட்டது. அதனால், மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு இன்று காலை வினாடிக்கு 3421 கன அடியாக குறைந்துவிட்டது.

கர்நாடகத்திடமிருந்து காவிரியில் உடனடியாக தண்ணீர் பெறவில்லை என்றால், காவிரி படுகையில் கருகும் பயிர்களைக் காப்பாற்ற முடியாது. கர்நாடகத்திடமிருந்து தண்ணீர் பெறுவதற்காக நமக்குள்ள ஒரே வாய்ப்பு காவிரி நீர் ஒழுங்குமுறை குழுவின் கூட்டம் தான். காவிரியில் அடுத்த 15 நாட்களுக்கு தண்ணீர் திறப்பது குறித்து முடிவெடுப்பதற்காக இந்தக்கூட்டம் நடைபெறுகிறது.

காவிரி பாசன மாவட்டங்களில் நிலவும் சூழல் குறித்தும், கடந்த காலங்களில் கர்நாடக அரசு உரிய அளவில் தண்ணீர் திறக்காதது குறித்தும் காவிரி நீர் ஒழுங்குமுறை குழு கூட்டத்தில் எடுத்துரைத்து தமிழகத்துக்கு தேவையான தண்ணீரை பெறுவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# விண்வெளிக்குச் செல்லவுள்ள பெண் ரோபோ!

இந்தியாவின் ககன்யான் திட்டத்திற்காக இந்தியா பெண் ரோபோவான 'வியோமித்ரா' அனுப் பப்படும் என மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் ஒரு சோதனை விண்வெளிப் பயணம் முயற்சி செய் யப்படும்.

இதன் பின்னர் இரண்டாவது முயற்சியில் பெண் ரோபோ 'வியோ மித்ரா' விண்வெளிக்கு அனுப்பப்படும் என்று இந்திய மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் கூறியுள்ளார்.

கோவிட் தொற்றுநோய் காரணமாக ககன்யான் திட்டம் தாமதமானது.

மேலும், அக்டோபர் முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் முதல் சோதனைப் பயணம் திட்டமிடப் படுகிறது.

விண்வெளி வீரர்களை அனுப்புவது போலவே அவர்களைத் திரும்பக் கொண்டுவருவதும் முக்கியமாகும் என்றும் மத்திய அமைச்சர் கூறியுள்ளார்.

இதற்காகவே பெண் ரோபாவான வியோமித்ரா அனுப்பப்படுவதாக மத்திய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவ விமானம் விபத்து: 3 அமெரிக்க படையினர் பலி!




அமெரிக்க இராணுவ உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளானதில் 3 பேர் உயிரிழந்துள்ளனர் . 20 பேர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவுஸ்ரேலியாவில் இடம்பெற்ற இராணுவ பயிற்சியின் போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்கா, அவுஸ்ரேலியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா போன்ற நாடுகளின் பங்களிப்புடன் இந்த இராணுவப் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவின் திவி தீவுகளை அண்மித்த பகுதியில் இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க இராணுவத்தினர் குழுவொன்றை ஏற்றிச் சென்ற குறித்த உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளாகியுள்ளதுடன், விபத்தில் மூன்று அமெரிக்க கடற்படை வீரர்கள் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் காயமடைந்த 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹைதியில் கிறிஸ்தவ பேரணி மீது துப்பாக்கி சூடு: 7 பேர் உயிரிழப்பு!



ஹைதி நாட்டில் கிறிஸ்தவ மத பேரணி மீது நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் 7 உயிரிழந்துள்ளனர்.

ஹைதி நாட்டில் பல கிளர்ச்சி குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அந்த நாட்டு மக்களில் பலர் சுய பாதுகாப்பு குழுக்களில் தங்களை இணைத்து கொண்டு செயல்பட்டு வருகின்றனர். அவற்றில் வா காலே என்ற குழுவானது, பலரது நம்பிக்கையை பெற்றுள்ளது.

இந்த நிலையில், அந்த நாட்டின் கனான் என்ற புறநகர் பகுதியில் பாதிரியார் மார்க்கோ என்பவர் தலைமையில் பேரணி ஒன்று நடைபெற்றது. இதில் 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இதுபற்றிய காணொளி சமூக வலைத்தளத்தில் வெளிவந்துள்ளன.

அந்த மத குழுக்களுடன் தொடர்புடைய மஞ்சள் வண்ண சட்டைகளை அணிந்தபடி பலர் பேரணியாக சென்றனர். ஒரு சிலர் தங்களின் கைகளில் கம்புகள், ஆயுதங்கள் போன்றவற்றையும் ஏந்தியபடி சென்றனர். எனினும், திடீரென இயந்திர துப்பாக்கிகளுடன் பேரணிக்குள் புகுந்த கிளர்ச்சி குழுவானது, அதிரடியாக அவர்களை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தியது.

இந்த சம்பவத்தில், 7 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்து உள்ளனர். கிறிஸ்தவ ஆலயத்திற்கு செல்லும் பலர் கடத்தப்பட்டும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிரியாவில் 7 பேர் சுட்டுக்கொலை!



சிரியாவில் ஏழு கிளர்ச்சியாளர்கள் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

சிரியாவில் கடந்த 2011 ஆம் ஆண்டு தொடங்கிய உள்நாட்டு போர் 12 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனால் அங்கு அரசாங்கத்துக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் அவ்வப்போது தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், அலெப்போ மாகாணத்தில் இராணுவ வீரர்கள் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு கிளர்ச்சியாளர்கள் சென்ற வாகனங்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இதில் 7 பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பலருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளது.

# கல்விச் சுற்றுலா, யாத்திரைக்கு சந்நிதியான் ஆச்சிரமம் உதவி



வடமராட்சி தொண்டமனாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் கல்விச் சுற்றுலா மற்றும் திருத்தல யாத்திரைக்காக உதவி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதி உதவியாக ஒரு லட்சம் ரூபா நேற்று சனிக்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடம், சைவசித்தாந்தத் துறை மாணவர்களின் கல்விச் சுற்றுலா, மற்றும் திருத்தல யாத்திரைக்காகவே குறித்த நிதி வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இந்த நன்கொடையை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத்தில் வைத்து பிரதிநிதிகளிடம் வழங்கினார்.

# திருகோணமலையில் ஒன்று கூடல்



**(ஹஸ்பர்)**

திருகோணமலை மாவட்ட உற்பத்தித்திறன் உத்தியோகத்தர்களால் தெரிவு செய்யப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கான திறன்மிகு தொழில் முனைவோருக்கான நிகழ்வானது (25) மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் மாவட்ட செயலக உப ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு அமைச்சின் செயலாளரின் பணிப்புரையின் பிரகாரம் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் “திறன்மிகு தொழில் முனைவோர்” தொடர்பான நிகழ்ச்சித்திட்டமானது நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், தேசிய உற்பத்தித்திறன் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் எஸ்.அச்சுதன், வளவாளராக மட்டக்களப்பு மாவட்ட உற்பத்தித்திறன் ஒருங்கிணைப்பாளர் ஆர்.புவனேந்திரன், துறைசார் உத்தியோகத்தர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இக்பால் ஞாபகார்த்தக் கிண்ணம் ஏறாவூர் யங்ஸ்டார் வி.க. வசமானது




**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக் அனுசரணையில் கல்முனை சனிமவுண்ட் விளையாட்டுக்கழகம் நடத்திய அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களை சேர்ந்த 22 முன்னணி உதைபந்தாட்டக் கழகங்கள் கலந்து கொண்ட மர்ஹூம் எம்.ஐ.எம்.இக்பால் ஞாபகார்த்த சம்பியன் கிண்ண மின்னொளி உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் கல்முனை சனிமவுண்ட் விளையாட்டுக்கழகத்தை 5:0 என்ற கோல் அடிப்படையில் ஏறாவூர் யங் ஸ்டார் விளையாட்டுக்கழகம் வெற்றி கொண்டு மர்ஹூம் எம்.ஐ.எம்.இக்பால் ஞாபகார்த்த சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (26) இரவு இடம்பெற்ற இறுதிப் போட்டிக்கு முன்னாள் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் ஜஸ்வர் உமர் பிரதம அதிதியாவும், முன்னாள் கௌரவ கிழக்கு மாகாண சபை உறுப்பினரும்,அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கொள்கை பரப்பு செயலாளரும் கே.எம்.அப்துல் றஸாக் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.



# மினுவாங்கொடை கல்வி வலயத்தில் நவீனமயமாகின்றன 34 பாடசாலைகள்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

நவீன உலகுக்கு ஏற்றவாறு நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலையீட்டுடன் பாடசாலைகளின் அபிவிருத்தி ஆரம்பமாகின்றது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கமைய இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடை கல்வி வலயத்தில் உள்ள 34 பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு முன்னோடித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை வலயக் கல்வி அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (25) நடைபெற்ற மினுவாங்கொடை கல்விக் கட்டமைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைத் தெரிவித்தார்.

மினுவாங்கொடை கல்வி வலயத்தில் தற்போது பாழடைந்த நிலையில் உள்ள பாடசாலை கட்டடங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பில் இதன்போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

மினுவாங்கொடை கல்வி வலயத்தில் 160 பாடசாலைகள் உள்ளன. நகர அபிவிருத்தி அதிகார சபையின் பங்களிப்புடன் தெரிவு செய்யப்பட்ட 34 பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு முன்னோடித் திட்டமாக இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதற்கான அனைத்து திட்டங்களும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பட்டயப் பொறியாளர்கள் மற்றும் கட்டடக் கலைஞர்களின் மூலம் தயாரிக்கப்படும்.

பாடசாலை அபிவிருத்திக்கான ஆரம்பத் திட்டம் தனியாரால் மேற்கொள்ளப்படுமாயின் அதற்காக 10 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலவிட நேரிடும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

பாடசாலைகளுக்கோ அல்லது வலயக் கல்வி அலுவலகங்களுக்கோ இவ்வளவு பெரிய தொகையை சுமப்பது கடினம் என்பதால், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பட்டய பொறியியலாளர்கள் மற்றும் கட்டடக்கலை நிபுணர்களை தொடர்பு கொண்டு பாடசாலைகளின் அபிவிருத்திக்கான அடிப்படைத் திட்டங்களை தயாரிக்குமாறும் அவர் குறிப்பிட்டார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலையீட்டில் தயாரிக்கப்பட்ட இத்திட்டம் தொடர்பில் பாடசாலை அபிவிருத்திக் குழு, ஆதிசிஷ்ட சங்கம், பாடசாலை முகாமைத்துவக் குழு என்பனவற்றுடன் கலந்தாலோசித்து மேலதிக ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தில் மேலும் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமாயின் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதிபர்களுக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை வழங்கினார்.

அந்த திருத்தங்களை உள்ளடக்கி அடுத்த மாதம் அடிப்படை திட்டம் தயாரிக்கப்பட்டு முடிக்கப்படும் என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திட்டங்களின் அடிப்படையிலேயே பாடசாலையின் எதிர்கால அபிவிருத்தி அமைய வேண்டுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அதிபர்களுக்கு வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோகிலா ஹர்ஷனி குணவர்தன, மினுவாங்கொடை வலயக் கல்விப் பணிப்பாளர் கபில ரணராஜா பெரேரா, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மஹிந்த விதானராச்சி உள்ளிட்ட அதிகாரிகள், மினுவாங்கொடை பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள் கலந்துகொண்டனர்.

# காத்தான்குடியில் தாகசாந்தி!





(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் நிலவும் வறட்சியான காலநிலையால் பொது மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கத்திலிருந்து பொது மக்களுக்கு நிவாரணம் தரும் வகையில் காத்தான் குடியைச் சேர்ந்த தனியார் நிறுவனமொன்று தன்னார்வாக முன்வந்து தாகசாந்தி நிலையம் அமைத்துள்ளது.

மனிதாபிமான அடிப்படையில் வழிப்போக்கர்கள், உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் போன்றோருக்கு தாக சாந்தி வழங்கியமை அனைவரதும் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

# ராமகிருஷ்ணா அணி கூடைப்பந்தாட்டத்தில் வெற்றி

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச மட்ட கூடைப்பந்தாட்ட போட்டியில் ராமகிருஷ்ணா அணி வெற்றி பெற்றுள்ளது.

தேசிய இளைஞர்கள் மன்றம் நடாத்திய காரைதீவு பிரதேச மட்ட கூடைப்பந்தாட்ட போட்டி விபுலானந்தா மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் ராமகிருஷ்ணா அணியை எதிர்த்து காரைதீவு கூடைப்பந்தாட்ட இளைஞர்கள் அணி மோதியது.

இதில் ராமகிருஷ்ணா அணி வெற்றி பெற்று மாவட்ட மட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.





# பாடசாலை மாணவர்களுக்குக் காலணிகள்!




**(எம்.எம்.ஜெஸ்மின் )**

கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைசால், இந்தப் பாடசாலையில் 2000 ஆம் ஆண்டு கல்வி கற்ற பழைய மாணவர்களிடம் விடுத்த வேண்டு கோளை அடுத்து வசதி குறைந்த மாணவர்களின் பாவனைக்கென ஒரு தொகுதி காலணிகளை அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

பாடசாலையில் கல்வி பயிலும் காலணி அணிந்து வராத மாணவர்களை பாடசாலை ஒழுக்காற்ற சபையினூடாக அடையாளங்கள் கண்டு உரிய மாணவர்களுக்கு காலணிகளை வழங்குவது பற்றி அண்மையில் பாடசாலை அதிபருடன் கலந்துரையாடப்பட்டது. இதன் பயனாகவே குறித்த உதவியை 2000 ஆண்டு பழைய மாணவர்கள் செய்வதாகத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர் எம்.ஏ. ஸலாம், விளையாட்டு பயிற்சிவிப்பாளர் எம்.ஏ.எம்.றியாழ், பாடசாலை அபிவிருத்தி சபை செயலாளர் எஸ்.எல்.ஹமீட், பழைய மாணவர் சங்க செயலாளர் எம்.ஐ.எம். ஜிப்ரி, 2000 ஆம் ஆண்டுவரை மாணவர் அணி சார்பாக ஏ.எல்.அஜ்மீர், எம்.எஸ். சிராஜ், எஸ்.எம். மன்சூர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# சிறுபராய மேம்பாடுகள் தொடர்பாக முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி

## மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சிறுபராய மேம்பாடு குறித்து முறையான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பளம் தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் 25ஆம் திகதி நடைபெற்றஊடகசந்திப்பில்கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்–

குழந்தை பிறந்தது முதல் 18 வயது வரை சிறுவர்களாகவே அவர்கள் கருதப்படுகின்றார்கள். எனவே அவர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், கல்விஎன்பனதொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

அந்த வகையில் எமது அரசும் இவ்விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தி வருவதுடன் பெண்கள் மற்றும் சிறுவர்களின் மேம்பாடு தொடர்பில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுத்து வருகின்றது.

அதன்படி, ஒரு குழந்தை பிறப்பதற்கு முன்னரே அந்தக் குழந்தையின் போசாக்கு குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது. குறை போசாக்குள்ள கர்ப்பிணித் தாய்மார்கள், போசாக்கான உணவைப் பெறுவதற்கான கொடுப்பனவு அட்டை வழங்கும் திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பிரதேச செயலக ரீதியில் இந்தச் செயன்முறை முன்னெடுக்கப்படுகின்றது.

ஒவ்வொரு அரச தாய் – சேய் நல மத்திய நிலையங்களில் பதிவு செய்த, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அங்கு நடைபெறும் கிளினிக்களுக்கு வருகை தருகின்றவர்களில் போசாக்குக் குறைபாடு உள்ளவர்கள் என்று அடையாளம் காணப்படுபவர்களுக்கு இந்தக் கொடுப்பனவு அட்டை வழங்கப்படுகிறது.

இந்த வருடத்தில் மாத்திரம், கர்ப்பிணித் தாய்மார்களுக்குக் கொடுப்பனவு அட்டை வழங்குவதற்காக அரசு 11 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

அதேபோன்று, பாடசாலை செல்லும் மாணவர்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு போசாக்கான காலை உணவை வழங்கும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியிலும், இயலுமான வரை சிறுவர்களின் உணவு, சுகாதாரம், கல்வி போன்ற விடயங்களுக்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகிறது. – என்றார்.

# தமிழ்த் தினப் போட்டியில் மாவட்ட, மாகாண வெற்றி



**(எம்.எம்.ஜெஸ்மின் )**

நடைபெற்று முடிந்த மாவட்ட, கிழக்கு மாகாண மட்ட தமிழ்மொழித் தின போட்டியில் கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலை தரம் 12 கலைப் பிரிவில் கல்வி பயிலும் மாணவி எம்.ஜே.பாத்திமா அமானா திறனாய்வு போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் மாகாண மட்டத்தில் மூன்றாவது இடத்தையும் பெற்று பாடசாலை வரலாற்றில் சாதனை புரிந்துள்ளார்.

வெற்றிபெற்றமாணவிக்கும்பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைசால் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.08.2023




இன்று வளமான நாளாக இருக்கும். இன்று நீங்கள் தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். முக்கிய இலக்கு களை அடைவீர்கள். உங்களிடம் இன்று மன நிறைவு காணப்படும்.

பணியில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் செயல்திறன் மூலம் உங்களுக்குள் மறைந் திருக்கும் திறமை வெளிப்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பண வரவு கண்டு மகிழ்வீர்கள். எதிர்பாராத வகையிலிருந்து பண வரவு கிடைக்க வாய்ப்புள்ளது.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




எதிர்மறையான விளைவுகளை தவிர்க்க அறிவார்ந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். அமைதியின்மையை சமாளிக்க வேண்டும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை அவசியம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேராமல் இருக்க கவனமாக பணியாற்ற வேண்டும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத் தகாத சூழ்நிலையை சந்திக்க நேரலாம்.

உங்கள் குடும்பத்தில் எழும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று பண வரவிற்கான அதிர்ஷ்டம் குறைவு. நிதியில் ஸ்திரத்தன்மை காண கையிலுள்ள பணத்தை சேமிக்க வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் விறைப்புத் தன்மை போன்ற பாதிப்பு காணப்படும்.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் நீங்கள் உயர்நிலை அடைவீர்கள் மற்றும் ஆறுதல் பெறுவீர்கள். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ள-தால் கவனமாகப் பணியாற்ற வேண்டும். தவறுகள் செய்து பின் அவற்றை சரி செய்வதை விட முதலிலேயே தவறுகள் நேரா வண்ணம் பார்த்துக் கொள்வது சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்வுப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி மகிழ்சிகரமாக இருக்காது. பண இழப்பிற் கான வாய்ப்பு உள்ளது. பண விஷயங்களை கையாளும் போது கவனமாக பாதுகாப்புடன் கையாளவும்.

தோல் சம்பந்தமான பிரச்சினையால் பாதிப்பு ஏற்படும்.




இன்று நம்பிக்கை நிறைந்திருக்கும் சூழல் காணப்படும்.உங்கள் இலக்குகளை அடைவதற்கான தைரியமும் உறுதியும் உங்களிடம் காணப்படும். மொத்தத்தில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் தன்னம் பிக்கை நிறைந்திருக்கும்.

நீங்கள் மனதளவில் வலுவுடனும் புத்துணர்ச்சியுடனும் காணப்படுவீர்கள். பணியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் சிறந்த தகவல் தொடர்பு கொண்டிருப்பீர்கள். உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள்.

இன்று உங்களிடம் பணம் அதிகமாக காணப்படும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

இன்று தேக ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் மன உறுதியுடன் காணப்படுவீர்கள்.




நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். இதனால் எளிதாக வெற்றி கிடைக்கும். பயனுள்ள முடிவுகள் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

பணியில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் பணிகளை உற்சா கத்துடன் எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் புரிந்துணர்வை வளர்த் துக்கொள்ள முயல்வீர்கள். இந்தப் போக்கு நல்லுறவை வலுப்படுத்தும்.

இன்று பணப்புழக்கம் சரளமாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கான ஊதியம் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காது. பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். எந்த விஷ யத்தையும் எளிதாக எடுத்துக் கொள்வது சிறந்தது.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்பு களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். கவனமுடன் பணியாற்றினால் பணியில் ஆர்வம் வளரும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொண்டு உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவிற்கு உகந்ததல்ல.

இன்று கணிசமான தொகை பராமரிக்க இயலாது. சம்பாதிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று நல்ல தரமான வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் காண வேண்டும் என்ற உங்களின் விருப்பம் காரணமாக அதிகமான சிந்தனை காணப்படும். அமைதியாக உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடன் பிரச்சினை வராமல் இருக்க நல்லுறவு கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடனான பிரச்சினை என்ன வென்று தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் அமைதி யுடனும் கட்டுப்பாடான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

அதிக பணம் சம்பாதிப்பது இன்று சிறிது கடினம். நல்ல பணப்புழக்கத்திற்கான அமைப்பு இருக்காது.

மன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்படலாம்.




இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாள். நீங்கள் மகிழ்ச்சியுடன் உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள் வீர்கள். உங்களிடம் அதிக ஆற்றலும் விழிப்புணர்வும் காணப்படும். உங்கள் வளர்ச்சியில் உங்களுக்கு மன நிறைவு காணப்படும்.

உங்கள் பணியில் முன்னேற்றகரமான பலன்கள் இருக்கும். அனைத்துப் பணிகளையும் தன்னிச்சையாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பணம் காணப்படும். உங்கள் வங்கியில் அதிக பணம் பராமரிப்பீர்கள்.

இன்று நீங்கள் சிறப்பான ஆரோக்கியத்தை பரா மரிப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.08.2023




உங்கள் இலக்குகளை அடைவதில் தமாதங்கள் காணப்படும். பொறுமையுடன் அணுக வேண்டும். அதற்கேற்றபடி திட்டமிட வேண்டும். வழிபாடு மற்றும் மந்திரங்கள் உங்கள் மனதிற்கு ஆறுதல் அளிக்கும்.

உங்கள் பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். பணியிடத்தில் சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் துணையின் அன்பும் மதிப்பும் பெற நீங்கள் பொறுமை காக்க வேண்டும். உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவு பாதிக்கும். எனவே அதனை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

உங்களுக்கு ஒவ்வாமை பாதிப்பு ஏற்படும்.




நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். வெளிப்படையாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

பணியிடத்தில் சில விரும்பத்தகாத சூழ்நிலையை நீங்கள் சந்திக்க நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற சிறப்பாக திட்டமிட வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்த்து அமைதியாக இருப்பதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கிக் கொள்ளலாம்.பேசுவதனால் தவறான புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று ஏற்படும் செலவுகள் காரணமாக கவலை ஏற்படும்.சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.இன்று கால் வலி மற்றும் வயிறு உபாதை ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. எதிர்மறை விளைவுகளை தடுக்க நீங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இன்று கவனமாக திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

இன்று உங்கள் பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாக பணியாற்ற வேண்டும்.

உணர்ச்சி வசப்படுவதனால் உங்கள் துணையுடனான உறவின் இனிமை பாதிக்கும். உங்கள் துணையுடன் நேர்மையாக மனம் திறந்து உரையாடுங்கள்.

இன்று பண இழப்பிற்கு வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கையாளும்போது கவனமாக இருக்க வேண்டும். உங்களுக்கு தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். இன்று திறம்பட செயலாற்றுவீர்கள். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்காலத்திற்கு திட்டமிடுவீர்கள்.

பணியிடத்தில் நற்செய்தி காத்திருக்கின்றது. உங்கள் திறமைகளை நிரூபிக்க நல்ல வாய்ப்பு உள்ளது. உங்கள் திறமைகளை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே இனிமையான தருணங்கள் ஏற்படும். உங்கள் துணையுடன் தரமான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். இன்று சேமிப்பு பழக்கத்தை மேற்கொள்ளும் நிலையில் காணப்படுவீர்கள்.




